12 பாடம்

# மன்னிப்பு

***நீ நேசிக்கிற எவரேனும் உன்னை எப்போ தாவது வேதனைப்படுத்தியது உண்டா? அவர் களை எளிதாக நீ மன்னித்திருக்கிறாயா? பலவித கசப்பான சூழ்நிலைகளுக்கும் கொடுமையான வேதனைகளுக்கும் தன்னை ஆளாக்கிய, தனது சகோதரர்களை யோசேப்பு மன்னித்தாரா என்று இப்போது பார்ப்போமா?***

யோசேப்புவைப் பலர் மிகவும் கொடுமையாக நடத்தியிருக்கிறார்கள். அவருடைய அண்ணன்களே யோசேப்பை அடிமையாக விற்றுப்போட்டார்கள். போத்திபாரின் மனைவி யோசேப்பின்மேல் பழிசாட்டினாள். போத்திபார் அவரைச் சிறையில் அடைத்தான். ஆனால், தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார். எகிப்திய அரசன் பார்வோன் மூலம் யோசேப்பை எகிப்தின் தேசம் முழு மைக்கும் அதிகாரியாக்கினார்.



தேவன் யோசேப்புக்குச் சொன்னபடியே எகிப்தில் செழிப்பான காலங்கள் ஆரம்பித்தன. எல்லாவிடங்களிலும் விளைச்சல் அமோகமாயிருந்தது. யோசேப்பு மிககவனமாகத் தானியங்களைப் பெரிய பெரிய களஞ்சியங்களில் பத்திரப்படுத்த ஆரம்பித்தார். பஞ்சக் காலத்திற்குத் தப்ப இப்போதே கவனமாகச் செயல்பட்டார். பஞ்சக்காலமும் வந்தது. புத்திசாலித்தனமாக தானியங்களை மக்களுக்கு விநியோகித்தார்.

அந்நிய தேசத்திலிருந்து பத்துப்பேர் தானியம் பெறுவதற்காக எகிப்துக்கு வந்தனர். யோசேப்பை அந்தப் பத்துப் பேரும் குனிந்து வணங்கினர். வெகுகாலத்திற்கு முன்னர் தாங்கள் விற்றுப்போட்ட தங்கள் தம்பியைத்தான் இப்போது வணங்குகிறோம் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள்.

முன்னைப்போல் இல்லாமல் சற்றேனும் மாறியிருக்கிறார்களா என்று அவர்களைச் சோதித்துப்

**மனன வசனம்**

**மன்னியுங்கள்; அப்பொழுது நீங்களும் மன்னிக்கப்படுவீர்கள்.**

**லூக்கா 6:37.**

பார்க்க யோசேப்பு விரும்பினார். எனவே, அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஒற்றர்கள்; எங்கள் தேசத்தை உளவு பார்க்க வந்திருக்கிறீர்கள்" என்று சொன்னார்.

"ஐயோ! எங்கள் ஆண்டவனே, அப்படியல்ல; நாங்கள் உண்மையாகவே சகோதரர்கள் தாம்; நாங்கள் மொத்தம் 12 பேர். ஒருவன் இறந்துவிட்டான்" என்றனர்.

"அப்படியெனில் உங்கள் கடைசித் தம்பியை இங்கே கூட்டிவாருங்கள்; அதுவரை சிமியோன் சிறையில் இருக்கட்டும்; அப்படியானால் நீங்கள் ஒற்றர் இல்லை" என்றார்.

வேதனையோடு தானியங்களைப் பெற்றுக்கொண்டுஊர் திரும்பினர்; வழியிலே தங்கள் சாக்குப்பைகளில் தங்களின் பணம் திரும்பவும் இருப்பது கண்டு திகைத்தார்கள்.

தங்கள் அப்பா யாக்கோபிடம் நடந்த யாவையும் சொன்னார்கள். அப்பா மறுத்தார். "யோசேப்பையும் இழந்து விட்டேன்; சிமியோனும் இல்லை; பென்யமீனையும் அனுப்பி விட்டு நான் என்ன செய்வேன்?" என்று அழுதார்.

ஆனாலும், எகிப்துக்குச் சென்று தானியம் வாங்கி வரவில்லையேல் யாவரும் பசியுடன் இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே, மிக வேதனையுடன் யாக்கோபு பென்யமீனையும் அவர்களுடன் அனுப்பி வைத்தார்.

தம்பி பென்யமீனைக் கண்டபோது, யோசேப்பின் உள்ளம் ஆனந்தத்தாலும் ஏற்பட்ட பிரிவாலும் பொங்கியது. யாருமறியாது தனியே சென்று அழுதார்.

மீண்டும் தானியத்தை அவர்களது சாக்குகளில் நிரப்பும்போது, தனது வெள்ளிப் பாத்திரத்தை பென்யமீனின் சாக்கினுள் வைக்க வேலையாளுக்குக் கட்டளையிட்டார்.

சிறிது நேரத்தில் அவர்கள்



## செய்தி

**என்னுடைய குடும்பத்தினர் என்னைத் துன்புறுத்தும்போது அவர்களை மன்னிக்க தேவன் எனக்கு உதவுவார்.**

பிடிபட்டனர். பென்யமீனின் சாக்கில் வெள்ளிப்பாத்திரம் கண்டுகலங்கினர். ஆடைகளைக் கிழித்தபடி யோசேப்பிடம் சென் றார்கள்.

"பென்யமீன் மட்டும் சிறை யாக இருக்கட்டும்; மற்றவர் கள் செல்லலாம்" என்று யோசேப்பு சொன்னவுடன் 11 பேரும் பணிந்து அழுதனர்.

அதற்கு மேலும் தன்னை அவர்களிடம், மறைக்க முடியாமல் 'தானே யோசேப்பு' என்று சொல்லி தன் சகோதரர் களை முத்தமிட்டு அழுதார். அவர்களின் குடும்பத்தை அழைத்துவரும்படி மிகுந்த வெகுமதிகளையும் திண் பண்டங்களையும் கொடுத்து அனுப்பினார்.

***செய்முறை:*** **கீழே உள்ள வட்டத்தினுள் இன்றைய பாடத்தின் முக்கியமான செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. அதைக்கண்டறிய ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள இரண்டாவது எழுத்தை வெட்டிவிடு. சரியான பதிலைக் கோட்டில் எழுது.**

